# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 65 — 1973 ජූනි 22 වැනි සිකුරාදා — 1973.06.22

65 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு யூன் மாதம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 591 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 601 |


**கவனிக்க.**—இலங்கை நிதித்தாபணம் சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. *படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டாலொழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3 *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பவத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத விதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத விதத்தையோ அத்தோடு மேலும் 5 சத விதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத விதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/ உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/ சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

---

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ)விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

---

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 03 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடன் அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்கள் அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்றும் பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(ii) ஒரு. பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனுல் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு. அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

என் : ஜி. சி./1/16

**பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு**

**அரசோபசாரத் துணைவர் பதவி**

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் அரசோபசாரத் துணைவர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் மாதிரிப் படிவத்திலுள்ளவாறு விண்ணப்பங்கள் அமைந்திருக்க வேண்டுவதுடன், அவை 1973.07.13 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இவ்வலுவலகத்தை வந்தடைதலும் வேண்டும்.

குறிப்பு.—விண்ணப்பமொன்று அல்லது அத்தகையவொரு விண்ணப்பம் தொடர்பான ஓர் அஞ்சலானது தொலைந்துபோயுள்ளது அல்லது அஞ்சற்படுத்தப்படுகையில் தாமதமாகியுள்ளது என்ற குற்றஞ்சாட்டுதல் எதுவும் கருத்திற்கொள்ளப்படக் கூடியதன்று. தத்தமது விண்ணப்பங்களை இறுதித் திகதி வரை காலந்தாழ்த்தும் விண்ணப்பதாரர்கள் தாந்தாம் இடருக்காளாகுநிலையிலேயே அங்ஙனம் செய்வர்.

2. தொழிலில்வீடுபடுத்தல் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—(i) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றிச் சம்பளத்திற்கு உரித்தற்றதுமாகும். தெரிவுசெய்யப்பெற்ற அபேட்சகர், அரசாங்க சேவைச் சேமலாப நிதிக்கும் பங்குதொகை நல்குமாறு வேண்டப்பெறுவர். எவ்வாருயினும், தெரிவுசெய்யப்பெற்ற அபேட்சகரானவர், நியமனத் திகதியன்று. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி அரசாங்க சேவையில் இளைப்பாற்றிச் சம்பளத்திற்குரிய ஒரு பதவியை ஏலவே வகிப்பவராயின், இளைப்பாற்றிச் சம்பளத்திற்காகிய உரிமைகளைத் தொடர்ந்தும் உடையவராக இருப்பார்.

(ii) தெரிவுசெய்யப்பெற்ற அபேட்சகர், ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாதவராயின், நியமனஞ்செய்யப்பெற்றமையின் பேரில் ஒரு மூன்றுண்டுகாலத் தகுதிகாண்நிலைக்கு உட்படுவார்.

(iii) அரசுச் சேவையிலுள்ள நிரந்தர, இளைப்பாற்றிச் சம்பள உரித்துடைய ஓர் அலுவலர் தெரிவுசெய்யப்பெறும் பட்சத்தில், அவரது நியமனமானது ஓராண்டு காலத்துக்குப் பதிற்கடமை அடிப்படையிலுள்ளதாக இருக்கும்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டமானது, ஆண்டொன்றுக்கு ரூ. 6,600/- திரட்டிய சம்பளத்திலிருந்து தொடங்கி ரூ. 180/- இனவான சம்பள ஆண்டேற்றங்கள் 8(எட்டு) ஆகவும் ரூ. 240/- இனவான சம்பள ஆண்டேற்றங்கள் 5 (ஐந்து) ஆகவும், ரூ. 9,240/- வரை உயரும். (1969.10.1 உக்கு முன் நடைமுறையிலிருந்த தோதான அடிப்படைச் சம்பள அளவுத் திட்டம் ரூ. 3,900—8 × ரூ. 180 ; 5 × ரூ. 240—ரூ. 6,540 ஆகவிருந்தது).

குறிப்பு.—தெரிவு செய்யப்பெற்ற அபேட்சகரானவர், அவரது அனுபவத்துக்கும் தகைமைகளுக்கும் ஏற்ற விகிதசமமான சம்பளப் படி நிலையில் இடப்பெறலாம்.

4. வயது எல்லை.—விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் வயதில் 25 (இருபத்தைந்து) உக்குக் குறையாமலும் 45 (நாற்பத்தைந்து) உக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏலவே அரசுச் சேவையிலுள்ள அபேட்சகர்களுக்கு வயதுபற்றிய இம்மேலெல்லை ஏற்புடையதாகாது.)

5. அபேட்சகர்களிடமிருந்து வேண்டப்பெறும் கல்வி, பிற தகைமைகள்.—(அ) அபேட்சகர்கள் கல்விப் பொதுத் தராதர (சாதாரண மட்ட) அல்லது அதற்கு ஈடான அல்லது மேற்பட்ட கல்வித் தகைமைகளை உடையோராக இருத்தல்வேண்டும். மேலும், ஆங்கிலத்திலும், இலங்கையின் வரலாறு, புவியியல் தொடர்பாகவும் அவர்கள் நல்ல அறிவுடையோராக இருத்தல்வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் சிறந்த நற்பண்பும், காத்திரமான உடற்கட்டும் உடையவரென உளநிறைவு ஏற்படுத்தும் வகையில் சான்று அளித்தல் வேண்டும்.

குறிப்பு.—படைச் சேவைகளில் அரசாணையமர்வு அனுபவமும், பொதுமக்கள் தொடர்புப் பணியில் அனுபவமும் பிற மொழிகளில் அறிவும் உடைய அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பெறும். மோட்டர் ஊர்த்தியொன்றைச் சாரத்தியஞ்செய்யும் உடைமையில் வைத்திருக்கும் ஆற்றல் உடைமை, இந்நியமனத்துக்குத் தெரிவுசெய்யப்பெறும் வாய்ப்பை அளிக்கும்.

6. விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும், அங்ஙனம் பணிக்கப்படும் போது பின்வரும் ஆவணங்களைக் காண்பிக்குமாறு வேண்டப்படுவார் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (நன்கு கவனிக்குக : ஞானஸ்நானச் சான்றிதழ்களோ உதவிபெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குவிதிகளின் சேவையின் நோக்கங்களுக்கென வழங்கப்பெற்ற பிறப்புச் சான்றிதழ்களோ எற்றுக்கொள்ளப்படா.) ;

(ஆ) ஆக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) இரு (2) நற்பண்புச் சான்றிதழ்கள் ; இவற்றுள் ஒன்று, அபேட்சகர் இறுதியாகக் கல்விபயின்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெறப்பட்டதாதல் வேண்டும் ;

(ஈ) சிங்களத்திற் சித்தி எய்தப்பெற்ற உச்சப் பரீட்சைக்குரிய சான்றிதழ்.

குறிப்பு.—(1) ஆவணங்கள் அல்லது அவற்றின் படிகள் எவையேனும் இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்படலாகா.

(2) வேண்டுகோள் விடுக்கப்பட்டபோது ஆவணங்களைக் காண்பிக்கத் தவறும் அபேட்சகர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவையேனும் கருத்திற்கொள்ளப்பெறா.

7. அரசுச் சேவையிலுள்ள அலுவலர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் முறையே அவ்வத்திணைக்களத் தலைவருக்கூடாக அனுப்பிவைக்கப்பெறல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள், அல்லது அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகள் எவையாயினும் செயலாளர், பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, என முகவரியிட்டு அனுப்பப்படவேண்டுமே தவிர, இவ்வமைச்சின் பிற எவ்வலுவலருக்கேனும் தனிப்பட்ட முறையில் அல்ல.

வி. சி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள்
அமைச்சு.

பாதுகாப்பு. வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
அஞ்சல் அலுவலகப் பெட்டி இல. 572,
குடியரசுக் கட்டடம், கொழும்பு—1.
1973, யூன் 8 ஆம் திகதி.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

அரசோபசாரத் துணைவர் பதவி

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (பெரிய, தெளிவான எழுத்துக்களில்) :————.

2. சொந்த முகவரி :————.

3. அலுவலக முகவரி ————:

4. (i) பிறந்த திகதி : ——— ஆம் ஆண்டு ——— மாதம்——— ஆம் திகதி
   (ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :————.

5. (i) வம்சாவழி அல்லது பதிவுவாரியான இலங்கைப் பிரசையா எனக் குறிப்பிடுக :————.
   (ii) பின்வருவோர் பிறந்த திகதிகள் :—
   (i) விண்ணப்பதாரர் :————.
   (ii) விண்ணப்பதாரரின் தகப்பனர் :————.
   (iii) விண்ணப்பதாரரின் பேரனர் :————.
   (iv) விண்ணப்பதாரரின் பூட்டனர் :————.

6. (i) திருமணமானவரா தனியாளா ? :————.
   (ii) குழந்தைகளின் எண்ணிக்கை :————.

7. ஈட்டப்பெற்ற கல்வித்தகைமைகள் (சித்தி பெற்ற பாடங்களுடன்) :————.

8. பின்வருவனவற்றில் சித்தியெய்தப்பெற்ற ஆக உயர்ந்த பரீட்சை :—
   (i) சிங்களத்தில் :————.
   (ii) தமிழில் :————.
   (iii) ஆங்கிலத்தில் :————.
   (iv) பிற மொழிகளில் :————.

9. தாங்கள் பணத் தொல்லைகளுக்கு ஆளாகாதிருக்கிறீர்களா ? இல்லையெனில், தங்கள் பணக்கொடுப்பனவு பொறுப்புகளின் அளவு யாது ?:————.

10. சட்ட நீதிமன்றமொன்றில் எக்கிறிமினல் தவறுக்காகவாயினும் தாங்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீர்களா ? அங்ஙனமாயின், திகதிகள் வழக்கு என் ஆகியவற்றுடன் முழு விபரங்களையும் குறிப்பிடுக :————.

11. தற்போதைய தொழிலும், முன்னைய நியமனங்களும் (எவையேனும் உளவேல்) : (நியமனத் திகதி, விட்டுவிலகிய திகதி இறுதியாகப்பெறப்பட்ட ஆண்டுச் சம்பளம்)

| பதவி | நிறுவனம் | திகதி தொடக்கம்/வரை | ஆண்டுச்சம்பளம் |
|---|---|---|---|

12. தெரிவு செய்யப்பெறுவதற்கு மேலும் எவையேனும் உரிமைக் கோரிக்கைகள் உளவாயின், அன்னவை :————.

13. நற்பண்புச் சான்றிதழ்கள் எவ்வாட்கள் இருவரிடமிருந்து பெறப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனவோ, அவர்களின் பெயரும் முகவரிகளும் :
   (1) :————.
   (2) :————.

14. பிறகுறிப்புரைகள் எவையேனும் உள்ளனவாயின் அவை :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் அளிக்கப்பெற்றுள்ள விபரங்கள் உண்மையானவும், சரியானவுமானவை என நான் இத்தாற் சான்றுபடுத்துகிறேன். ஈண்டு அடக்கப்பெற்றுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது சரியானவையல்ல என யான் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பெறு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால், தகைமைநீக்கத்துக்கும், தவறுந்தன்மை அத்தகைய நியமனத்துக்குப் பின்பு கண்டுபிடிக்கப்படின் இழப்பீடு இன்றிப் பதவி நீக்கத்துக்கும், ஆளாவேன் என்பதையும் யான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

6—693—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

### உதவிச் சட்ட ஆய்வுரையாளர்

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் உதவிச் சட்ட ஆய்வுரையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தால் வழங்கப்பெறும் படிவங்களின்மீதே விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டியிருப்பதோடு, அவை 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன் என்னை வந்தடைதலும் வேண்டும்.

குறிப்பு.—விண்ணப்பப் படிவமொன்று அல்லது அத்தகைய படிவம் தொடர்பான அஞ்சல் ஒன்று அஞ்சற்படுத்தப்படுகையின்போது காணமற்போயுள்ளது அல்லது தாமதப்படுத்தப்பட்டுள்ளது எனும் எக்குற்றஞ்சார்த்தலும் கருத்திற்கொள்ளப் பெறுது. இறுதித் திகதி வரைக்கும் தத்தமது விண்ணப்பங்களைக் காலந்தாழ்த்தும் அபேட்சகர்கள் அவ்வாறு செய்தல், தாந்தாம் ஆபத்துக்கு ஆளாகும் நிலையிலேயே ஆகும்.

2. சேவைக்கு ஈடுபடுத்தப்படும் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றிச்சம்பள உரிமையற்றதுமாகும். தெரிவுசெய்யப்பெறும் அபேட்சகர் அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவுதொகை அளிக்குமாறு வேண்டப்படுவர்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டமானது ரூ. 11,520/- இலிருந்து தொடங்கி, ரூ. 480/- இனவான 9 சம்பள ஆண்டேற்றங்களாகவும் ரூ. 600/- இனவான 3 சம்பள ஆண்டேற்றங்களாகவும் உயர்ந்து, ரூ. 17,640/- வரையாக இருக்கும்.

(1969.10.1 க்கு முன் நடைமுறையிலிருந்த இதன் நேரொத்த அடிப்படைச் சம்பள அளவுத் திட்டம், ஆண்டொன்றுக்கு ரூ. 11,280/- இல் ஈராண்டு காலத்தரிப்புடன், ஆண்டொன்றுக்கு ரூ. 8,880—9×ரூ. 480/2 ரூ. 600—ரூ. 14,400 ஆக இருந்தது.) தெரிவுசெய்யப்பெறும் அபேட்சகர்கள் தத்தமது கல்வித் தகைமைகளுக்கு இயைய, தாபனப் பணிப்பாளருடனை உசாவுதலின் பேரில், ஏற்ற சம்பளக் குறிநிலையில் அமர்த்தப்படலாம்.

குறிப்பு.—தெரிவுசெய்யப்பெறும் அபேட்சகர், இந்நியமனத்தில் உறுதிப்படுத்தப்படும் திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுள், சிங்கள மொழியில் சி. த. ப. தரத்தினதான வினைத்திறமைகாண் தடைச் சோதனையொன்றிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர். இச்சோதனையிற் சித்தியடையத் தவறுகை சம்பள ஆண்டேற்றங்கள் பின்போடப்படும் விளைவை ஏற்படுத்தும்.

4. வயதெல்லை.—ஒவ்வோர் அபேட்சகரும் 1973.2.24 ஆம் திகதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (இம்மேல் வயதெல்லை அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களுக்கு ஏற்புடையதாகாது).

5. **கல்விக்குரியவும், பிறவாருனவுந் தகைமைகள்.**—அபேட்சகர் ஒவ்வொருவரும்—

(1) நன்கு கணிக்கப்பெற்ற ஒரு பல்கலைக்கழகச் சட்டமாணிப் பட்டதாரியாகவும், அத்துடன் ஒன்றில் சுப்பிறிம் நீதி மன்றத்துக்குக் குறைந்தபட்சம் (இரண்டு) 2 ஆண்டுகளுக்குக் குறையா வழக்கறிஞராகப் பணியாற்றிய நிலை பேறுடைய ஓர் அத்துவக்காத்து ஆகவும் அல்லது ஒரு பாரிஸ்டர் ஆகவும் இருத்தல் வேண்டும்.

(2) மாணிப்பட்ட, அல்லது அத்துவக்காத்து, அல்லது பாரிஸ்ரர் பரீட்சையில் ஒரு பாடமாகப் பொது அனைத்துநாட்டுச் சட்டத்திற் சித்தியீட்டியுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(3) மிகச்சிறந்த நற்பண்பும் காத்திரமான உடல்நலமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—மாணிப்பட்டத்திற்குப் பின்னரான பொது 'அனைத்து நாட்டுச் சட்டத் தகைமைகளைக் கொண்டுள்ளோரும், அத்துடன் அனைத்துநாட்டு நிறுவனங்களிற் சேவையாற்றியுள்ளோரும் அத்தோடு அனைத்துநாட்டுச் சட்டப் பிரயோகத்தில் செய்முறை அனுபவம் உடையோருமான அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

6. அபேட்சகர் ஒவ்வொருவரும் பின்வரும் ஆவணங்களைக் காண்பிக்கும் வண்ணம் பணிக்கப்படும்போது அவ்வாறு செய்யுமாறு வேண்டப்படுவர் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**நன்கு கவனிக்குக**—ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது அரசாங்க உதவிபெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்கு விதிகளின் கோவையின் நோக்கங்களுக்கென வழங்கப்பெற்ற பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பெரு ;

(ஆ) மாணிப்பட்ட அல்லது உச்சக் கல்விச் சான்றிதழ் ;

(இ) பாடங்களின் பரிப்பாளர், கல்லூரிப் போதனாசிரியர் அல்லது பேராசிரியர் ;

(ஈ) அபேட்சகர் கொண்டுள்ள உயர்பதவிக்குரிய அத்துடன்/ அல்லது செயல்முறைத் தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) சிங்கள மொழியில் சித்தியெய்தப்பெற்ற ஆக உயர்ந்த பரீட்சையையொட்டிய சான்றிதழ்.

**குறிப்பு :**—(i) ஆவணங்கள் எவையோ அவற்றின் நகல்களோ விண்ணப்பத்தோடு இணைக்கப்படலாகா.

(ii) வேண்டப்படும்போது ஆவணங்களைக் காண்பிக்கத்தவறும் அபேட்சகர்களிடமிருந்தான விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்பெரு.

7. அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களிடமிருந்தான விண்ணப்பங்கள் அவ்வவர்களது திணைக்களத் தலைவர்க்கூடாக அனுப்பி வைக்கப்பெறல் வேண்டும்.

8. விண்ணப்பம் அல்லது அத்தொடர்பான எவ்வஞ்சலாயினும் செயலாளர், பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, என முகவரியிடப்பட வேண்டுமே தவிர இவ்வமைச்சின் பிற எவ்வலுவலருக்கும் ஆளுக்குரியவகையில் அல்ல.

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
அஞ்சல் அலுவலகப் பெட்டி 572,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு-1,
1973.6.8.

6-692— 22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

**கல்வி அமைச்சு**

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் 1974 ஆம் ஆண்டு ஒரு வருட உள்ளக பட்டப்பின் கல்வித் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறியும் இரு வருட அஞ்சல் மூல பட்டப்பின் கல்வித் தகுதித் தேர்வுப்பயிற்சி நெறியும்

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் நடைபெறும் மேற்குறித்த கல்வித் தகுதித்தேர்வுப் பயிற்சி நெறியைப் பின்பற்றுதற்குப் பின்வரும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

(i) அரசாங்க பாடசாலைகளிலும் ஆசிரியர் கலாசாலைகளிலும் சேவையிலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் ;

(ii) அரசாங்க தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் சேவையிலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் (இவ்வகுதியில் அடங்கும் ஆசிரியர்கள் இரு வருட அஞ்சல் மூலப் பயிற்சி நெறிக்குச் சேர்க்கப்படுவார்கள்) ;

(iii) இலங்கைக் கல்விச் சேவையிலுள்ள பட்டதாரி உத்தியோகத்தர்கள்.

2. இத்தகுதித் தேர்வுக்கான உள்ளகப் பயிற்சி நெறி ஒரு வருட கால அளவினதாகவும் அஞ்சல் மூலப் பயிற்சி நெறி இரு வருட கால அளவினதாகவும் அமையும்.

3. **விண்ணப்பங்கள் அனுப்பும் முறை.**—

(அ) கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறைக்கமைய விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு "கல்விப் பணிப்பாளர் (ஆசிரியர் கல்விக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு, 1973 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும் ;

(ஆ) விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " கல்வித் தகுதித் தேர்வுக்கான பயிற்சிநெறி " எனத் தெளிவாக அடையாளம் இடப்பட வேண்டும் ;

(இ) விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின்னர் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. விண்ணப்பம் ஒன்று அஞ்சலில் காணமற் போய் விட்டது அல்லது தாமதிக்கப்பட்டுவிட்டது என்ற எவ்வித குற்றச்சாட்டும் சீர்தூக்கப்படமாட்டாது. கடைசி நாள்வரை தமது விண்ணப்பங்களைத் தாமதிக்கும் விண்ணப்பதாரிகள் தாமாகவே தமக்கு இடரைத் தேடிக் கொள்வர்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டவேண்டும் :—

(அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ஆ) ஒரு வருட உள்ளகப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பதாரிகள் 1.1.74 அன்று 45 வயதுக்கு மேற்படாதவராயும் அஞ்சல் மூலப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பதாரிகள் 1.1.74 அன்று 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகப் பட்டதாரியாக இருக்க வேண்டும் ;

(ஈ) (i) அரசினர் பாடசாலை அல்லது அரசினர் ஆசிரியர் கலாசாலை அல்லது அரசினர் தொழில்நுட்ப நிலையம் ஒன்றில் 12.7.73 அன்று, பட்டதாரிகளுக்கான சம்பள விகிதத்தில் பட்டதாரி ஆசிரியராக 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்; **அல்லது**

(ii) அரசினர் பாடசாலை அல்லது அரசினர் ஆசிரியர் கலாசாலை அல்லது அரசினர் தொழில்நுட்ப நிலையம் ஒன்றில் 12.7.73 அன்று, பட்டதாரிகளுக்கான சம்பள விகிதத்தில் பட்டதாரி ஆசிரியராகக் குறைந்தபட்சம் 3 வருட கற்பித்தல் அனுபவம் உட்பட 10 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு.**—(i) அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பாடசாலை ஒன்றில் தகுதியுடைய ஆசிரியராகப் புரிந்த சேவையும், அவருடைய நியமனம் பிரதேச வித்தியாதிபதியால் அல்லது பிரதம வித்தியாதிகாரியால் அங்கீகரிக்கப்பட்டிருப்பின் 3 வருட அனுபவத்தைக் கணித்தற்பொருட்டு அங்கீகரிக்கப்படும். இந்நோக்கத்துக்கு கட்டணம் அறவிடும் பாடசாலைகளாக 1951 ஆம் ஆண்டு மாறிய உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் கட்டணம் அறவிடாத தனிப்பட்ட பாடசாலைகளாக 1.12.60 அன்று மாறிய பாடசாலைகளும் அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பாடசாலைகளாகக் கருதப்படும்.

(ii) பிராச்சீன பண்டித தராதரத்தின்பேரில் பட்டதாரிச் சம்பளத்தில் வைக்கப்பட்ட பிராச்சீன பண்டித தராதரப் பத்திரம் உடையவர்களான அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பட்டதாரிகள், தேவையென ஈண்டு குறிப்பிட்டுள்ள 3 ஆண்டுப் படிப்பித்தல் அனுபவத்தை கணிக்கையில் தாம் பட்டதாரிச் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்பட்ட தேதி முதல் உள்ள சேவையைக் கணித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர் ;

(உ) சிங்களத்தில்/தமிழில்/ஆங்கிலத்தில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும் ;

(ஊ) படிப்பு லீவிற்காக இதற்குமுன்னர் முறிசெய்து ஒப்பமிட்டுள்ள ஆசிரியர்கள், முறியின் பிரகாரம் தாம் சேவை புரியக் கட்டுப் பட்டுள்ள காலவெல்லையுள் 12.7.73 அன்று குறைந்தபட்சம் 5 ஆண்டுகளைப் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே, ஒரு வருட உள்ளகப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும் தகுதியைப் பெறுவர். தேவைப்படும் காலசேவையைப் பூர்த்தி செய்தி ராதவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. அபேட்சகர் ஒருவர் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய வேண்டிய தகைமைகளைப் பெற்றில்லையெனத் தெரிவுப் பரீட்சையின் முன்னர் அல்லது பின்னர் எத்தருணத்திலேனும் காணப்படின் அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு அபேட்சக நிலையும் இரத்துச்செய்யப்படும். பயிற்சி நெறிக் காலத்தில் வேலை, நடத்தை, வரவு ஆகியவை எந்நே ரத்திலேனும் திருப்தியற்றதாகக் காணப்படும் ஆசிரியர்கள் பயிற்சி நெறியிலிருந்து விலக்கப்படுவார்கள்.

6. **தெரிவு செய்தல்.**—ஒரு எழுத்துமூலப் பரீட்சை, நேர்முகப் பரீட் சை ஆகியவை மூலம் தெரிவு நடைபெறும். எழுத்துமூலப் பரீட்சை 25.8.73 அன்று பரீட்சாதிகாரியால் நடாத்தப்படும்.

**பரீட்சை பின்வரும் பாடங்களிலாகும் :**

(1) தற்கால விடயங்கள் பற்றிய பொதுத் தகவலும் அறிவும், கல்விப் பிரச்சினைகள் பற்றிய தகவலும் அறிவும் ;

(2) பொது விவேகம்.

7. பயிற்சி நெறியின் பொருட்டுத் தேர்ந்தெடுப்பதற்கான எழுத்து மூலப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழி மூலம் நடைபெறுவதாயிருக்க, தெரிவு செய்யப்பட்டோருக்கான பயிற்சி நெறிப் போதனை சிங்களத்திலும் தமிழிலும் மாத்திரமே நடைபெறும்.

8. **ஒப்பந்தம்.**—ஒரு வருட உள்ளகப் பயிற்சி நெறிகளுக்குத் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் பயிற்சி நெறியைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்தபின் கல்விப் பகுதியில் ஆகக் குறைந்தது 5 வருடம் கடமை புரிவதாகப் பிரதேச வித்தியாதிபதியுடன்/பிரதம கல்வி உத்தியோகத் தருடன் ஓர் உடன்பாட்டுக்கும் உறுதிமுறிக்கும் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். எனினும், பயிற்சி நெறியால் ஏற்படும் செலவு ரூபா 10,000க்கு மேற்பட இருப்பின் ஒப்பந்த காலம் இலங்கை அரசாங்க தாபன சட்டக்கோவைக்கமையத் தீர்மானிக்கப்படும்.

9. உள்ளகப் பயிற்சி நெறியைப் பின்பற்றி விதிக்கப்பட்ட காலத்துக் குள் தகுதித்தேர்வு தகைமையைப் பெறத் தவறும் அபேட்சகர் எவரும், படிப்பு லீவுக்காலத்தில் அவருக்குச் சம்பளமாகவும் சகாயப்படிகளாகவும் கொடுக்கப்பட்ட முழுத் தொகையையும் அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

10. **படிப்பு லீவு.**—குறித்த வருட உள்ளகக் கல்வித் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்கு முழுச் சம்பள படிப்பு லீவு வழங்கப்படும். அத்தகைய விண்ணப்பதாரி கள் படிப்பு லீவுக்கு தாம் சேவை புரியும் உரிய மாவட்ட/பிரதேசக் கல்விக் கந்தோருக்கு, அங்கிருந்து பெறப்பாலனவாகிய படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும். இப்பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப் படும் இலங்கைக் கல்விச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது படிப்பு லீவுக்கு கல்வி அமைச்சின் பொது நிர்வாகக் கிளையின் கல்விச் சேவைப் பிரிவுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

11. அபேட்சகர் ரூபா 20.00 பெறுமதியுள்ள முத்திரைகளை ஒட்டி அவைகளை தனது கையொப்பமும் திகதியும் இட்டு செல்லுபடியற்றன வாக்க வேண்டும். முத்திரைகள் ஒன்றுக்குமேல் ஒன்று வரக்கூடிய தாக ஒட்டப்படலாகா.

பிரேமதாச உடகம,
மகா வித்தியாதிபதி.

ஆசிரியர் கலாசாலைகள் கிளை,
கல்வி அமைச்சு, மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு ஜூன் மீ 6 ந் உ.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

**கல்வி அமைச்சு**

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் ஒரு வருடஉள்ளக பட்டப்பின் கல்வித் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிக்கும் இரு வருட அஞ்சல்மூல பட்டப்பின் கல்வித் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிக்குமான விண்ணப்பம்— 1974 ஆம் ஆண்டு

1. (அ) முழுப்பெயர் : திரு./திருமதி/செல்வி/வண :————
   (ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் :————.
2. நாட்டினம் (சாதி) :————.
3. (i) பிறந்த திகதி :————.
   (ii) 1.1.74 அன்றுள்ளபடி வயது :— வரு :————
   மா :———— நா :————.
   (iii) ஆசிரியராகப் பதிவிலக்கம் :————.
4. விலாசம் : (1) அலுவலக :————.
   (2) சொந்த :————.
5. படித்த பல்கலைக் கழகங்கள் :————.
   (வரிசைக் கிரமத்தில்)
6. (i) பெற்ற பட்டம் :————
   பகுதி : ————ஏ/பி
   சித்தி/சிறப்பு :————.
   முதலாம்/இரண்டாம்/மூன்றாம் பிரிவுச் சித்தி :————.
   பல்கலைக்கழகம் :———— ஆண்டு :————
   பொது/விசேட :————.
   வகுப்பு/பிரிவு :————.
   (ii) பட்டப் பரீட்சைக்கு எடுத்த பாடங்கள் :———— .
   (iii) பல்கலைக் கழகத்தில் கல்வி பெற்ற போதனாமொழி :————
7. பாடசாலையில் அல்லது பின்னர் பெற்ற கல்வி அல்லது வேறு விசேட தகைமைகள் :————.
8. தற்போதைய நியமனம் :————.
   அந்தஸ்து :————.
   (அதிபர் தரம் I, II, III/உப அதிபர்/விசேட பதவி தரம் I, II, III/உதவி ஆசிரியர், சிறப்பு பட்டதாரி/பட்டதாரி).
   இலங்கைக் கல்விச் சேவையிலுள்ளவராயின், தற்போதைய பதவி யும் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதியும் :————.
9. (i) படிப்பித்தல் அனுபவம் :— வரு :————
   மா :———— காலம் :————.

| பாடசாலைப் பெயர் | படிப்பித்த பாடங்கள் | போதனா மொழி | படிப்பித்த வகுப்புகள் |
|---|---|---|---|
| (அ) | | | |
| (ஆ) | | | |

   (ii) பட்டம் பெற்றபின் அரசினர் பாடசாலையில் அல்லது ஆசிரியர் கலாசாலையில் அல்லது தொழில்நுட்பக்கல்வி நிலையத்தில் 12.7.73 அன்றுள்ளபடி படிப்பித்தல் அனுபவம் :————
10. (i) ஆங்கிலத்தில் பெற்றுள்ள தகைமைகள் :————.
    (ii) சிங்களம்/தமிழ் மூலம் விண்ணப்பதாரி படிப்பிக்கக்கூடிய பாடங்களும் தரங்களும் :————.
    வகுப்பு :————. பாடம் :————. அதியுயர்ந்த தரம் :————.
11. விண்ணப்பதாரிகள் திறமையைப் பாராட்டக்கூடிய விசேட படிப்புகள் அல்லது வெளியீடுகள் :————.
12. விண்ணப்பதாரி பாடசாலையில் உதவி புரியும் வெளிவேலை முயற் சிகள் :————.
13. பாடசாலைக்கு வெளியே விண்ணப்பதாரி பங்குபற்றிய சமூக முயற்சிகளும் நலன்புரி முயற்சிகளும் :————.
14. தனது விண்ணப்பம் சார்பில் விசேட உரிமை கோர விண்ணப் பதாரி சமர்ப்பிக்க விரும்பும் யாதேனும் தகவல் :————
15. முன்னர் பெற்றுள்ள படிப்பு லீவு பற்றிய விபரங்களும் ஒப்பந்தக் காலமும் :————.
16. விண்ணப்பதாரிக்கு எதிராக யாதேனும் ஒழுக்க நடவடிக்கை சம்பந்தமான விசாரணை முடிவுறாமல் இருக்கிறதா ? இருப்பின் அது பற்றிய விபரங்கள் :————.
17. பரீட்சைக்கு எந்த மொழி மூலம் தோற்ற விரும்புகிறீர் என் பதைக் குறிப்பிடுக :————.
18. ஒரு வருட உள்ளகப் பயிற்சி நெறியையா அல்லது இரு வருட அஞ்சல் மூலப் பயிற்சி நெறியையா பின்பற்ற விண்ணப்பதாரி விரும்புகிறாரெனக் குறிப்பிடவும் :————.

| இங்கு முத்திரை ஒட்டி அதனைச் செல்லுபடி யற்றதாக்கவும் |
|---|

மேலே நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் சரியானவையென நான் உறுதியளிக்கின்றேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :————.

(விண்ணப்பதாரி கடமை புரியும் கல்லூரித் தலைவருக்கூடாக இவ்விண் ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்).

6–849—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

### சிறைச்சாலைத் திணைக்களம்

ஆண் தாதிகள் பதவி

ஆண்தாதிகள் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு வேண்டிய தகைமையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே ஒப்பமிட்டவரின் முகவரிக்கு 06.07.73 க்கு அல்லது அதற்குமுன் பின்வரும் மாதிரிப்படிவத்தில் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

நிரந்தர பதவிகள்—9

தற்காலிக பதவிகள்—9

**குறிப்பு.**—விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் மேல் இடது பக்கத்தில் "ஆண் தாதி பதவிக்கு விண்ணப்பம்" எனக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஒப்புக்கொண்டமை பற்றி அறிவிக்கப்படமாட்டா.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

நிரந்தர பதவி ரூபா 3,864—18×144—6,456 (திரட்டிய).

தற்காலிக பதவிக்கு நாளொன்றுக்கு ரூபா 12/- (எல்லாம் தொகுத்து) வீதம் வழங்கப்படும். இப்படி 6 மாதங்கள் வேலை செய்த பின்பு ரூபா 3,864—18×144—6,456 சம்பளம் வழங்கப்படும்.

3. **சேவை நிபந்தனைகள்.**—9 பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றிச் சம்பளமற்றதுமாகும். ஏற்கனவே அரசாங்க நிரந்தர சேவையிலுள்ளோர் இப்பதவிக்கு தெரிவுபடின் அவர் தொடர்ந்து இளைப்பாற்றிச் சம்பள உரித்துடையவராவர். புதிதாக தெரிவுபடுபவர் அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவுதொகை செலுத்தப்படல் வேண்டும்.

4. தெரியப்படுபவர் முன்னமே அரசாங்க சேவையில் இல்லாதவராக இருப்பின் நியமனம் 3 ஆண்டு காலத்துக்கு தகுதிகாண் முறையில் இருக்கும். அரசாங்க நிரந்தர சேவையிலிருந்து தெரிவுபடின் 1 வருட காலத்திற்கு பதில் கடமை புரிபவராக இருப்பர்.

5. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் இலங்கையின் எப்பகுதியிலும் சேவை செய்ய வேண்டப்படுவர். புதிதாக அரசாங்க சேவைக்கு அமர்த்தப்படுபவராக இருப்பின் அவர் வைத்தியப் பரீட்சையில் இலங்கையின் எப்பகுதியிலும் சேவை புரிய உடற் தகுதியுடையவரென உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

6. **கல்வித் தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகள் பெற்றுள்ளாரென திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(i) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(ii) 1973 ம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதியன்று 19 வயதுக்கு குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலோ அல்லது முப்படையிலோ உள்ளோருக்கு வயது எல்லை கவனிக்கப்பட மாட்டாது).

(iii) க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் அல்லது அதற்கு சமமான அல்லது கூடிய தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) ஆண் தாதியென இலங்கை மருத்துவ சங்கத்தினால் பதிவு செய்யப்பட்டவரென்றும்.

7. விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும் :—

(i) பிறப்பு சான்றிதழ்.

(ii) மிக உயர்ந்த கல்வித் தராதர சான்றிதழ்.

(iii) ஆண்தாதியென இலங்கை மருத்துவ சங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்.

(iv) அண்மையில் பெற்ற மூன்று நற்குண சான்றிதழ்.

8. விண்ணப்பக்காரர் ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது முப்படையில் இருப்பின் அவ்வத்திணைக்களத்தின் தலைவரினூடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

இது தொடர்பாக பிரயாணச் செலவுகள் வழங்கப்படமாட்டா.

ஏ. ஏ. த சில்வா,
பதில் சிறைச்சாலை ஆணையாளர்

சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 9,
1973.6.7.

### சிறைச்சாலைத் திணைக்களம்

ஆண்தாதி பதவிக்கான விண்ணப்பம்

(பத்திரங்களின் பிரதிகளை (மூலம் அல்ல) இணைத்தல் வேண்டும்)

1. முழுப்பெயர் :————.
   குடும்பப் பெயர் :————.
   மற்றப்பெயர் :————.
2. நிரந்தர விலாசம் :————.
3. தேசிய இனம் :————.
4. பிறந்த திகதியும் :————.
   73.07.06 இல் வயதும் :————.
5. விவாகமானவரா தனித்தவரா ? :————.
6. தற்பொழுது சேவையில் இருப்பவராயின்—
   (அ) தற்போதய திணைக்களத் தலைவர் :————.
   (ஆ) இடம் :————.
   (இ) பதவியில் இருக்கும் காலம் :————.
7. தாதிப் பயிற்சி பெற்ற இடம் :————.

| | வாசிப்பு | எழுத்து | பேச்சு |
|---|---|---|---|
| 8. சிங்கள அறிவு : | ———— | ———— | ———— |
| தமிழ் அறிவு : | ———— | ———— | ———— |
| ஆங்கில அறிவு : | ———— | ———— | ———— |

9. தாதிப் பயிற்சிக்கான பதிவு எண்ணும் ஆண்டும் :————.
10. ஏனைய தகைமையும்/அனுபவமும் :————.
11. அண்மையில் பெற்ற மூன்று நற்குணச் சான்றிதழ்கள் :—
    ————.

அரசாங்க சேவையிலிருந்தோ அல்லது வேறு எந்த நிலையத்திலிருந்தோ திறமையின்மைக்கோ அல்லது நீதிமன்றத்தில் குற்றவாளியென தண்டிக்கப்பட்டோ நான் சேவையிலிருந்து நீக்கப்படவில்லை. இதன் காரணமாக தப்பான உறுதியுரைக்குத் தண்டனை பதவியிலிருந்து உடன் நீக்குதல் என அறிவேன்.

————,
**விண்ணப்பதாரரின் ஒப்பம்**

திகதி :————.

6–699—22.06.65 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

### வவுனியா மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணி பகுதிக்கு சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி வெற்றிடம்

வவுனியா மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணி பகுதிக்கு சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே தரப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரப் பிரதியில் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ம் வருடம் ஆடி 07 ந் திகதியிலோ அன்றி அதற்கு முன்னதாகவோ எமது விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. தீர்க்கமான சம்பளம் இப்பதவிக்குத் கிடையாது. திடீர் மரணங்களின் போது இடம்பெறும் ஒவ்வொரு மரண விசாரணைக்கும் ரூபா 10/- தரப்படும்.

3. **தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம்—

(அ) விண்ணப்ப முடிவு திகதியின் போது 30 வயதிற்கு மேற்பட்டவராகவும் 60 வயதிற்கு உட்பட்டவராகவும்,

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உடையவராகவும்,

(இ) நெடுங்கேணி பகுதியின் நிரந்தரப் பிரஜையாகவும்,

(ஈ) (1) 1925 ம் ஆண்டிற்கும் 1944 ம் ஆண்டுக்குமிடையே தமிழ்ப் பாடசாலை விடுகைப் பத்திரப் பரீட்சையில் அல்லது தமிழ்ப் பாடத்துடன் ஆங்கிலப் பாடசாலை விடுகைப் பரீட்சையில் அல்லது தமிழ்ப் பாடத்துடன் கல்வித் திணைக்கள கனிஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும்,

(2) தமிழ்ப் பாடத்துடன் சிரேஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையிச் அல்லது அதனிலும் கூடிய பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழே கோரப்படும் பத்திரங்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(ஆ) ஆகக் கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

(இ) இரண்டு சமீபகால நற்சான்றிதழ்கள்.

5. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

எல். பி. விக்கிரமாராச்சி,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி,
வவுனியா,
1973-06-04.

மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**வவுனியா மாவட்ட நெடுங்கேணி பகுதியில் சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி வெற்றிடம்**

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :———.
2. விலாசம் :———.
3. நிரந்தர வசிப்பிடமும் வதியும் கால எல்லையும் :———.
4. (அ) விண்ணப்ப முடிவு திகதியின் போது சரியான வயது : ———.

   (ஆ) பிறந்த திகதியும் இடமும் :———.
5. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா :———.
6. கல்வித் தகைமைகள் :———.
7. தற்போதைய தொழில் :———.
8. முன்பு வேறு தொழில்கள் புரிந்திருப்பின் அவற்றின் விபரம் : ———.
9. விண்ணப்பதாரிக்கு உரிமையான ஆதனங்களின் பெறுமானமும் பரப்பும் :———.
10. யாருக்காவது கடன் கொடுக்குமதியாயின் அதன் விபரம் : ———.
11. விண்ணப்பதாரி நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டோ தண்டிக்கப்பட்டோ இருப்பின் அதன் விபரம் :———.
12. இப்பதவிக்குத் தேவையான வேறு தகைமைகள் இருப்பின் அவற்றைக் குறிப்பிடுக :———.

என்னால் மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையென்றும் உண்மையானவையென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

———,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :———.

6–795—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

**வவுனியா மாவட்டத்தில் உள்ள முள்ளியவளைப் பகுதிக்கு சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி வெற்றிடம்**

வவுனியா மாவட்டத்தில் உள்ள முள்ளியவளைப் பகுதிக்கு சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே தரப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரப் பிரதியில் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ம் வருடம் ஆடி 07 ந் திகதிக்கோ அன்றி அதற்கு முன்னதாகவோ எமது விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

2. தீர்க்கமான சம்பளம் இப்பதவிக்குக் கிடையாது. திடீர் மரணங்களின் போது இடம்பெறும் ஒவ்வொரு மரண விசாரணைக்கும் ரூபா 10/- தரப்படும்.

3. தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம்—

(அ) விண்ணப்ப முடிவு திகதியின் போது 30 வயதுக்கு மேற்பட்டவராகவும் 60 வயதிற்கு உட்பட்டவராகவும்,

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உடையவராகவும்,

(இ) முள்ளியவளைப் பகுதியில் நிரந்தரப் பிரஜையாகவும்,

(ஈ) (1) 1925 ம் ஆண்டிற்கும் 1944 ம் ஆண்டுகளுக்குமிடையே தமிழ்ப் பாடசாலை விடுகைப் பத்திரப் பரீட்சையில் அல்லது தமிழ்ப் பாடத்துடன் ஆங்கிலப் பாடசாலை விடுகைப் பரீட்சையில் அல்லது தமிழ்ப் பாடத்துடன் கல்வித் திணைக்கள கனிஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும்,

(2) தமிழ்ப் பாடத்துடன் சிரேஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சை அல்லது அதனிலும் கூடிய பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழே கோரப்படும் பத்திரங்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.
(ஆ) ஆகக் கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.
(இ) இரண்டு சமீபகால நற்சான்றிதழ்கள்.

5. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

எல். வி. விக்கிரமாராச்சி,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி,
வவுனியா,
1973-06-04.

மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**வவுனியா மாவட்ட முள்ளியவளைப் பகுதியில் சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி வெற்றிடம்**

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :———.
2. விலாசம் :———.
3. நிரந்தர வசிப்பிடமும் வதியும் கால எல்லையும் :———.
4. (அ) விண்ணப்ப முடிவு திகதியின் போது சரியான வயது : ———.

   (ஆ) பிறந்த திகதியும் இடமும் :———.
5. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா :———.
6. கல்வித் தகைமைகள் :———.
7. தற்போதைய தொழில் :———.
8. முன்பு வேறு தொழில்கள் புரிந்திருப்பின் அவற்றின் விபரம் : ———.
9. விண்ணப்பதாரிக்கு உரிமையான ஆதனங்களின் பெறுமானமும் பரப்பும் :———.
10. யாருக்காவது கடன் கொடுக்குமதியாயின் அதன் விபரம் : ———.
11. விண்ணப்பதாரி நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டோ தண்டிக்கப்பட்டோ இருப்பின் அதன் விபரம் :———.
12. இப்பதவிக்குத் தேவையான வேறு தகைமைகள் இருப்பின் அவற்றைக் குறிப்பிடுக :———.

என்னால் மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையென்றும் உண்மையானவையென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

———,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :———.

6–794—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

**காங்கேசன்துறை பட்டின சபைப் பிரதேசத்திற்கு சடுதிமரண விசாரணையாளர் பதவி**

காங்கேசன்துறை பட்டின சபைப் பிரதேசத்திற்கு சடுதிமரண விசாரணையாளர் ஒருவரை நியமிக்கவிருப்பதனால் அக்கிராமச் சபைப் பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவரிடமிருந்து மாத்திரம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

2. அரசாங்க, கூட்டுத்தாபன மற்றும் உள்ளூராட்சிமற்ற ஊழியர்களினதும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளினதும் 5.7.73 திகதியன்று 30 வயதுக்குக் குறைந்தவர்களிடமிருந்தும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3. சகல விண்ணப்பதாரர்களும் கீழ்க்காணும் விபரங்களையும், சான்றுப் பத்திரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும் :

(1) முழுப் பெயரும் விலாசமும்.

(2) வசிக்கும் இடம்.

(3) வயதும் பிறந்த திகதியும்.

(4) விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ?

(5) கல்வித் தகைமைகள் :

(i) தமிழ்.

(ii) ஆங்கிலம்.

(6) தற்போது வகிக்கும் பதவி அல்லது முன்பு வகித்த பதவிகள் :———.

(7) சமீபத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள். (பிரதிகள்)

எம். ரி. டபிள்யூ. அமரசேகரா,
யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்,
1973 யூன் 8.

6-802—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

---

**வன திணைக்களம்**

உதவி வன பாதுகாவல் அதிபர் பதவி

வன திணைக்களத்திலுள்ள உதவி வன பாதுகாவல் அதிபர் பதவிகள் இரண்டிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலின் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற் தயாரிக்கப்பட்டுச் செயலாளர், காணி விவசாய அமைச்சு, த. பெ. இல. 569, கொழும்பு 2 என்ற முகவரியிட்டுப் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 13.7.1973.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 13.7.1973.

(1) கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(2) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டது எனக் கூறப்படும் குற்றச் சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்துக்கு, காணி விவசாய அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்**—இலங்கைக் குடியரசின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப்பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்கான கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களே கொடுத்தல் வேண்டும்.

2. (1) **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்**—தெரிவு செய்யப்படும் மனுதாரர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் பயிற்சி பெறுவதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படக் கூடும்.

அப்படி வெளிநாடுகளுக்கு அனுப்பப்படின்—

(அ) வெளிநாடு போவதற்கு முன் இத் திணைக்களத்தின் வேலைகளைக் கிரகித்துக் கொள்வதற்கு முதலில் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(ஆ) அரசாங்க பிரமாணங்களுக்கு அமைய கொழும்பிலிருந்து செல்வதற்கும் பின் கொழும்பு திரும்புவதற்கும் இலவசப் பிரயாணச்சீட்டு வழங்கப்படும்.

(பயிற்சி பெறப்படும் நாட்டிலேயே அவர் ஏற்கனவே இருப்பின் அவருக்குப் போவதற்கான பயணச்சீட்டு வழங்கப்படமாட்டாது)

(இ) பயிற்சி சம்பந்தமாக அளிக்கப்படும் படி முதலியன அந்நேரத்தய இலங்கைக் குடியரசின் பிரமாணங்களின்படியே அமையும்.

(2) **உடன்படிக்கையும் பிணையும்**—தெரிவு செய்யப்படும் மனுதாரர்கள் இலங்கைக் குடியரசுடன் கீழ்க்காணும் விடயத்தை உள்ளடக்கிய உடன்படிக்கையொன்று செய்துகொள்ள வேண்டும்.

(அ) ஏனைய விடயங்களோடு பயிற்சியை நன்றியறிதலுடன் பின்பற்றி திருப்திகரமாகச் செய்துமுடிப்பேனென்றும், கேட்டுக்கொள்ளப்பட்டால் பயிற்சி முடிந்த பின் ஓர் குறிப்பிட்ட காலத்திற்கு (இலங்கைக் குடியரசால் நிர்ணயிக்கப்படும்) இலங்கைக் குடியரசிற் சேவை செய்வேனென்றும்,

(ஆ) உடன்படிக்கும் நிபந்தனைகளுக்கும் நடக்கத்தவறின் இப் பயிற்சியால் ஏற்படும் சகல செலவுகளையும் (இலங்கைக் குடியரசாலும் உபகாரம் அளிக்கும் முகவர்களாலும் செலவு செய்யப்படும்—சம்பளம், படி பயணச்சீட்டுக் கட்டணங்கள் உள்ளடங்கலாக அனைத்தையும்) திருப்பிக் கொடுப்பேனென்றும் உறுதியளிக்கப்பட வேண்டும்.

(3) பதவி நிரந்தரமானது. நியமனம் சகாயநிதி அடிப்படையில் அமையும். பதவியாளர் நியமன திகதியிலிருந்து அவர் நாடு திரும்பித் திணைக்களத்திற் பொறுப்பேற்ற பின் 3 வருடகாலம் வரை தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர். புலமைப்பரிசில் காலத்திலோ அல்லது தகுதிகாண்நிலை காலத்திலோ அல்லது அவரின் சேவைகள் திருப்திகரமாக இல்லாவிடின் இக்குறிப்பிட்ட காலத்திலோ அல்லது காலமுடிவிலோ வேலைநீக்கத்திற்கு ஆளாவர். நியமன திகதியிலிருந்து 6 வருட காலத்திற்குள் நாட்டு மொழிகளிலும், சட்டம், கணக்கு முதலியவற்றிலும் சித்தியடையும்படி வேண்டப்படுவர்.

3. **சம்பளமும் படிகளும்**—பதவி சகலதும் அடங்கிய வருடச் சம்பளம் ரூபா 7,440 ல் தொடங்கி ரூபா 360 கொண்ட 10 வருடாந்த ஏற்றமும் ரூபா 480 கொண்ட 11 வருடாந்த ஏற்றமும் பெற்று ரூபா 16,320 ஆக உயரும். தகுதிகாண்தடை ரூபா 12,000 க்கு முன்பும் ரூபா 14,880 க்கு முன்பும் உண்டு. தெரிவு செய்யப்பட்டவர் ரூபா 11,520 ஐத் தாண்டுமுன் குறிப்பிட்ட பட்டதாரிப்பயிற்சிப் பட்டக்கல்வியையோ அல்லது வனவியற் தேர்வுப் பத்திரத்தையோ பெற வேண்டும்.

4. **தேவையான தகைமைகள்**—ஒவ்வொரு மனுதாரும் கீழ்க்காணும் தகைமை உடையவர் என்பதற்குத் திருப்திகரமான அத்தாட்சி சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) மிகச் சிறந்த குணமும் தேகாரோக்கியமும் உள்ளவர்.

(ஆ) 13.7.1973 ல் 30 வயதுக்கு மேற்படாதவர்.

(இ) (1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் தாவரவியல் ஒரு பாடமாகக் கொண்ட 1 ம் அல்லது 2 ம் தர விஞ்ஞானபட்டம் (விலங்கியலும் அல்லது இரசாயனவியலும் மேற்கொண்ட பாடங்களாக அமைந்த) அல்லது அதே தகுதி வாய்ந்த தகைமைகள் உடையவராகவும் (விசேட பட்டக்கல்வியுடையோர் விரும்பத்தக்கவராவர்) அல்லது

(2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் விவசாயத்தில் 1 ம் அல்லது 2 ம் தர சிறப்புப்பட்டம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். (அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் /கல்விநிலையத்தில் பட்டக் கல்வி அல்லது வனவியல் சிறப்புப் பட்டம் கூடுதலான தகைமைகளாகும்).

குறிப்பு.—

(அ) கூடிய வயதெல்லை ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்கட்குப் பொருந்தாது.

(ஆ) இலங்கைப் பல்கலைக்கழக இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்களும் மனுச் செய்யலாம். ஆனால் பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டவுடன், அவர்கள் சித்தியடைந்துள்ளார்களா என்பதை எனக்கு அறிவிக்க வேண்டும். தவறின் அவர்களது மனுக்கள் கவனிக்கப்படமாட்டா.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கப்படும்போது சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு—சமயத் தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழக பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர். கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருக்க வேண்டும்.

(ஈ) உயர் தொழிற் தகைமையும் தொழில்நுட்பத் தகைமையும்/ உயர் தொழிற் தகைமை அல்லது தொழில்நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :—

(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தமக்குத் தொடர்பான திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை காணி விவசாய அமைச்சின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், காணி விவசாய அமைச்சு என முகவரியிட்டு அனுப்புதல் வேண்டும். இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பலாகாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) வில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்குக.

ஏ. ரி. எம். சில்வா,
செயலாளர்,
காணி, விவசாய அமைச்சு.

காணி, விவசாய அமைச்சு அலுவலகம்,
த. பெ. இல. 569, வைக்சோல் வீதி,
கொழும்பு 2,
11.6.1973.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

உதவி வன பாதுகாவல் அதிபர் பதவிக்கான விண்ணப்பம்

(இவ் விண்ணப்பப் படிவத்துடன் எந்தவொரு சாதனமும் இணைக்கப்படக் கூடாது)

1. முழுப்பெயர் (உறுப்பெழுத்தில்) :————.

2. அஞ்சல் முகவரி :————.
(முகவரியில் ஏற்படும் மாற்றங்கள் உடனடியாக அறிவிக்கப்படவேண்டும்)

3. (அ) பிறந்த திகதி :—
வருடம் :————. மாதம் :————. நாள் :————.
(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியில் சரியான வயது :—
வருடங்கள் :———— மாதங்கள் :———— நாட்கள் :————.

4. வம்சாவளி காரணமாகவா, அல்லது பதிவு காரணமாகவா இலங்கைப் பிரசையெனக் குறிப்பிடுக :————.
(பதிவு காரணமாக இலங்கைப் பிரசையெனின் விபரங்களைத்தருக)

5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பூட்டன் :————.

6. திருமணமானவரா, தனியாளா, விதவையா, அல்லது தாரமிழந்தவரா, எனக் குறிப்பிடுக :————.

7. பின்வரும் பாடங்களில் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சை :
(1) சிங்களம் :————.
(2) தமிழ் :————.
(3) ஆங்கிலம் :————.

8. 12 வயதிலிருந்து நீர் கல்வி பெற்ற பாடசாலைகள், கல்லூரிகள், ஏனைய நிறுவனங்கள் :————.

பொதுக்கல்வி

| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம்—வரை |
|---|---|
| (1) | |
| (2) | |
| (3) | |

உத்தியோகக்கல்வி

| கல்வித்தாபனம் | தொடக்கம்—வரை |
|---|---|
| (1) | |
| (2) | |
| (3) | |

9. நீர் கடன்தொல்லைகள் அற்றவரா ? இல்லையெனில் கடன் பொறுப்புக்களின் தொகை என்ன ? :————.

10. சட்ட நீதிமன்றத்தால் ஏதாவது குற்ற பாதகத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டுள்ளீரா ? அப்படியானால் வழக்கு இலக்கத்தைக் குறிப்பிட்டுத் தேதிகளோடு முழு விபரங்களையும் தருக :————.

11. பாடசாலைக் கல்வி, உத்தியோகக் கல்வி, நுண்தொழிற் கல்வித் தகைமைகள் :————.
(பல்கலைக்கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வியும்/அல்லது நுண்தொழிற் கல்வித் தகைமைகள், விசேட வகுப்புப் பட்டங்களாயின் அவற்றின் விபரங்கள், தோற்றிய பாடங்கள் நிறுவனங்களின் பெயர்கள் என்பவற்றைத் தேதிகளுடன் தருக)

12. தற்போதைய தொழிலும் முன்னர் பதவிகளிலிருந்தால் அவற்றின் விபரங்களும் :—

| பதவி | தொடக்கம்—வரை | ஆண்டுச்சம்பளம் ரூபா |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |

(அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீங்கிய காரணம் கீழேயுள்ள 13 ம் நிரப்புப் பிரிவிற் குறிப்பிடல் வேண்டும்)

13. மேலும் வேறு விபரங்கள் :————.

14. உம்மைப்பற்றிய விபரங்களைப் பெறக்கூடிய உமக்கறிந்த இருவரின் பெயர்களையும், முகவரிகளையும் தருக :—
(1)
(2)

இவ் விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் நான் அத்தாட்சிப் படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது சரியற்றவையெனத் தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனாக்கப் படுவேன் என்றும், நியமனம் பெற்றபின் சரியற்றவையென்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப் படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
திகதி :————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

(அபேட்சகர் அரசாங்க சேவையில் இருப்பவரெனின் அப்பகுதித் தலைவரின் அறிக்கை)

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
திகதி :————.

6-783—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

### கட்டடங்கள் திணைக்களம்

தொழில் பயிலுநர் படவரைஞர்களுக்கான பதவிகள்

இலங்கைக் குடிகளிடமிருந்து தொழில் பயிலுநர் படவரைஞர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் மேற்படி திணைக்களத்தினால் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் படிவத்திலமைந்த விண்ணப்பங்கள் 1973.07.03 திகதியன்றோ அதன் முன்போ கட்டடங்கள் பணிப்பாளர், கிளை 'எம்ஈ', கட்டடங்கள் திணைக்களம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் வந்தடையவேண்டும்.

2. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றிற்கு ரூபா 3,000—3×90—ரூபா 3,270 ஆகும்.

**குறிப்பு.**—5(iii) (அ) விலும் 5(iii) (ஆ) பந்திகளிலும் குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிட்ட சம்பளத் திட்டத்தின் ஆண்டொன்றுக்கு ரூபா 3,090 ம் ரூபா 3,180 ம் உள்ள அளவுத் திட்டத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர்.

3. **வயதெல்லை.**—1973-07-03 தேதியன்று 18 வயதுக்கு மேற்பட்டதாகவும் 30 க்குட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

4. **நியமன விதிகள்.**—(i) பதவிகள் தற்காலிகமானவையாகும். அரசாங்க சேவைச் சகாயநிதிக்கு உதவுத் தொகை செலுத்தப்படல் வேண்டும்.

(ii) நியமிக்கப்படவுள்ளவர்கள் தாம் விடாமுயற்சியுடனும் நம்பிக்கையுடனும் தொடர்ந்து படித்து II ம் வகுப்பு படவரைஞர்களாகத் தேர்வடைந்து, பயிற்சியின் முடிவில், தேவையெனக் கருதினால், 5 வருடங்களுக்குக் குறையாத காலத்திற்கு இத்திணைக்களத்தில் II ம் வகுப்பு படவரைஞராகச் சேவையாற்றுவார்களென்பதை உறுதிப்படுத்துமுகமாக, திணைக்களத்துடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுமாறு வேண்டப்படுவர். இந்த நியதிகளையும் நிபந்தனைகளையும் திருப்திப்படுத்துவதற்கொப்பாக பயிற்சியாளர்களும் அவர்களின் பெற்றோர்களும்/பாதுகாவலர்களும் ரூபா 6,500 க்குச் சமமான முறியொன்றில் இரு பிணையாளர்களுடன் கையொப்ப மிடுமாறும் வேண்டப்படுவர்.

5. **கல்வியும் மற்றைய தகைமைகளும்.**—

(i) சிறந்த நற்குணமுடையவராயும், உடல்நலமுடையவராயும்

(ii) (அ) சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரம் கணிதம் உட்பட

அல்லது

(ஆ) சிங்களம்/தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகட்கு மேற்படாது தோற்றிப் பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரணம்)

(iii) அத்துடன்—

(அ) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் முழுநேர (1 வருட) படவரைஞர் பயிற்சியைத் திருப்திகரமாக முடித்தோ

அல்லது

(ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கான (2 வருட) பயிற்சியைத் திருப்திகரமாக முடித்தோ இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—சிங்கள மொழிமூலம் பயிற்றப்பட்ட சிங்கள விண்ணப்பதாரிகளைப் பொறுத்தவரையில் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(1961 ஆம் ஆண்டு தை மாதம் 1 ந் திகதிக்கு முன்னர் அரச சேவையிலிருந்த உத்தியோகத்தர்களுக்கும் அரச சேவையிலிருந்துகொண்டும் வேறு பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கும் இத்தகைமை பொருத்தமுடைத்தாகாது.)

6. **சேவை நிபந்தனைகள்.**—(i) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பந்தி 5(iii) (அ) வின்கீழ் குறிப்பிட்ட நியதிகளின் பிரகாரம் தகுதியடைந்தவர்களாயின் திணைக்களத்தில் இரண்டு வருடம் தொழில் பயிலுநராகவும், பந்தி 5(iii) (ஆ) வின்கீழ் குறிப்பிட்ட நியதிகளின் பிரகாரம் தகுதியடைந்தவர்களாயின் ஒரு வருடமும் தொழில் பயிலுநராகப் பயிற்சி பெற வேண்டும்.

(ii) தொழிற்பயிற்சியை திருப்திகரமாக முடித்து, பின்னர் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சையிலும் சித்தியடையும் பரீட்சார்த்திகள், வெற்றுப்பதவிகள் இருப்பதைப் பொறுத்து, படவரைஞர் வகுப்பு II க்கு நியமிக்கப்படுவதற்குத் தகுதியடைந்தவர்களாவார்கள்.

(iii) தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் உள்ளக வெளியக கடமைகளிலீடுபடுமாறு வேண்டப்படுவார்கள்.

(iv) அவர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிகள், நிதி ஒழுங்குவிதிகள், நடைமுறைக் கைநூலின் ஒழுங்குவிதிகள், திணைக்களக் கட்டளைகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்பட்டவர்களாவார்கள்.

(v) அவர்கள் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவதற்குட்படுமாறு வேண்டப்படுவார்கள்.

7. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்புதல் வேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (மு. கு. சமயதிட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) தொழில்நுட்பத் தகைமைகளுக்குச் சான்றிதழ்.

(இ) நல்லொழுக்கச் சான்றிதழ்கள் இரண்டு.

8. அரசாங்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) இன் முற்பகுதியில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

யே. பீ. வீரரத்ன,
கட்டடங்கள் பணிப்பாளருக்காக.

கட்டடங்கள் திணைக்களம்,
கொழும்பு 1,
1973.06.11

### கட்டடங்கள் திணைக்களம்

தொழில் பயிலுநர் படவரைஞர்கள் பதவிக்கான விண்ணப்பம்

1. (i) பெயர் (முதலெழுத்துக்களுடன்) :————.
   (ii) முழுப் பெயர் :————.
   (பெரிய எழுத்தில்)
2. முகவரி :————.
3. (i) பிறந்த திகதியும் இடமும் :————.
   (பிறப்புச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
   (ii) 1973.07.03 ல் வயது :—
   வருடங்கள் :————.
   மாதங்கள் :————
4. (i) சாதியம் :————.
   (ii) இலங்கையராயின் பிறப்பாலா அல்லது பதிவாலா :————.
5. விவாகமானவரா/விவாகமாகாதவரா :————
6. கல்வி, தொழில்நுட்பத் தகைமைகள் :————.
   (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
7. பாடசாலையை விட்டபின்னர் செய்த தொழில்/பயிற்சிகளின் விபரம் :————.
8. முன்பு ஏதாவது அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனத்திலோ வேலை செய்தவராயின், அத்தொழிலிலிருந்து விலகியதற்கான காரணம் :————.
9. தொழில்நுட்பப் பயிற்சிகளின் விபரங்கள், ஏதும் இருந்தால் :————.
10. இணைக்கப்பட்ட நல்லொழுக்கச் சான்றிதழ்கள் பெறப்பட்டவர்களின் பெயரும், தகுதியும் :————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் ஏதாவது தவறானதாக அல்லது பிழையானதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படமுன் காணப்பட்டால் தகைமை நீக்கத்திற்கும், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டபின் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடெதுவுமில்லாப் பதவி நீக்கத்திற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

6–879—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

### றப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

றப்பர் அறிவுரையாளர்/பரிசோதகர் பதவிகள்

றப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் றப்பர் அறிவுரையாளர்/பரிசோதகர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே காண்பிக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 1973 ம் ஆண்டு யூலை மாதம் 10 ந் தேதியன்று அல்லது அதற்கு முன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

1. சேவை **நிபந்தனைகள்.**—இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் அரசாங்க சேவைச் சேமலாப நிதிக்கு உதவு தொகை செலுத்தல் வேண்டும். 1972 ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாந் தேதிக்கு முன்னிருந்து அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியை வகித்து வரும் அரசாங்க அலுவலர், தெரிவு செய்யப்படுமிடத்து, புதிய பதவியிலும் தொடர்ந்து தனது ஓய்வூதிய உரிமையைப் பெறத் தகுதியுடையவராவர்.

2. **சம்பள விகிதம்.**—ரூ. 3,864—144×18—ரூ. 6,456 (வருட கட்டுச் சம்பளம்)

3. தேவையான தகைமைகள்.—அபேட்சகர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகள் பெற்றுள்ளவரென்பதற்குத் தக்க சான்றுகள் காட்டுதல் வேண்டும் :

(i) பதிவு செய்யப்பட்ட அல்லது பரம்பரை இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

(ii) 1973 ம் ஆண்டு யூலை மாதம் 10 ந் தேதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(iii) பேராதெனிய அல்லது குண்டசாலை விவசாயக் கல்லூரியின் சிரேட்ட தாராதரப் பத்திரம் அல்லது,

(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரிப் பட்டம் பெற்று ஆகக் குறைந்தது ஒருவருட காலமாவது றப்பர் அல்லது பிற பயிர்கள் நடுகை செய்தல் சம்பந்தப்பட்ட புறவெளி வேலைகளில் அனுபவம் அல்லது,

(v) அம்பாறை, ஹாடி சிரேட்ட தொழில் நுட்ப நிலையத்தின் விவசாய 'டிப்ளோமா'ப் பத்திரம் அல்லது,

(vi) தாவரவியல், விலங்கியல், இரசாயனம், பௌதிகம் ஆகிய பாடங்களிலோ அல்லது வேறு மூன்று விஞ்ஞான பாடங்களிலோ ஒரே முறையில் பெறப்பட்ட கல்விப் பொதுத் தராதரப் பத்திரத் (உயர்தரம்) துடன் றப்பர் அல்லது பிற பயிர்கள் நடுகை சம்பந்தமான புறவெளி வேலைகளில் மூன்று வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

இறப்பர் கட்டுப்பாட்டு இலிகிதர் சேவை II ம் தரத்தின் 'அ' பிரிவில் உள்ளவர்களும், II ம் தரத்தின் 'ஆ' பிரிவில் ஊர்ஜிதப்படுத்தப்பட்டு ஐந்து வருடகால திருப்திகரமான சேவையுள்ளவர்களும் மேற்படி பதவிக்கு, வயது அல்லது கல்வித் தராதரம் ஆகியவை பொருட்படுத்தாமல் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

4. தெரிவு செய்யப்பட்டவர் தனது உத்தியோகப் போக்குவரத்திற்காக வாகனமொன்றினை வைத்திருக்கும்படி எதிர்பார்க்கப்படுவார்.

5. விண்ணப்பம் ஒவ்வொன்றும் அபேட்சகரின் குணம் பற்றி அண்மையில் பெற்ற இரண்டு நற்சான்றிதழ்கள், மிகவுயர்ந்த கல்வித் தராதரங்களுக்குப் பெற்றுக் கொண்ட சான்றிதழ், பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளை இணைந்திருத்தல் வேண்டும்.

6. இவ்வர்த்தமானியின் முதலாம் பகுதியின் இரண்டாந் தொகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைக் குறித்து கவனம் ஈர்க்கப்படுகின்றது.

ச. சண்முகம்,
றப்பர் கட்டுப்பாட்டாளர்.

றப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
அ. பெ. இலக்கம் 184,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு யூன் மாதம் 13 ந் தேதி.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

றப்பர் அறிவுரையாளர்/பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் :————.
2. அஞ்சல் முகவரி :————.
3. பிறந்த தேதி :————.
   1973 ம் ஆண்டு யூலை மாதம் 10 ந் தேதிய வயது :————.
   வருடம் :————.
4. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா :————.
5. கல்வித் தகைமைகள் :————.
   (அ) வர்த்தமானி அறிவித்தலின் மூன்றும் பந்தியில் கோரப்பட்டுள்ளதன் பிரகாரம் உமது கல்வித் தகைமைகளின் விபரங்களைத் தரவும் (பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்) :————.
   (ஆ) உமது மிகவுயர்ந்த கல்வித் தகைமைகளின் விபரங்களைத் தரவும் (பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்) :————.
6. மொழிகளில் தேர்ச்சி (சிங்களம், தமிழ் ஆங்கிலம்) :————.

| | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| (அ) எளிதாக பேசக்கூடிய மொழிகள் :————. | | | |
| (ஆ) சுலபமாக வாசிக்கக் கூடிய மொழிகள் :————. | | | |
| (இ) இலகுவாக எழுதக்கூடிய மொழிகள் :————. | | | |

7. பாடசாலை விட்டு விலகிய பின் மேற்கொண்ட வாழ்க்கைப் பணிகளின் முழு விபரங்களை அவற்றின் காலவெல்லைகளுடன் குறிப்பிடவும் :————.
8. தற்போது பணிபுரிகின்றீரா ? (ஆம் அல்லது இல்லை) :————.
   பணிபுரிபவராயின் பின்வருவனவற்றைக் கூறவும் :
   (அ) வேலை கொள்பவரின் பெயரும் முகவரியும் :————.
   (ஆ) பணியேற்றுக்கொண்ட தேதி :————.
   (இ) வகிக்கும் பதவியினதும், கடமைகளினதும் முழு விபரங்கள் :————.
   (ஈ) தற்போதைய சம்பளம் (விசேட படிகள் உட்பட) :————.
9. இவ்விண்ணப்பத்திற்குகந்த விசேட அனுபவம் அல்லது தகைமை யாதேனும் உம்மிடமிருப்பின் அவற்றைச் சுருக்கமாகக் கூறவும் :————.
10. இத்துடன் இணைத்துள்ள குண நற்சான்றிதழ்கள் வழங்கியோரின் பெயர்கள் :
   (i)————.
   (ii)————.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் முற்றிலும் சரியானவையென்று நான் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :————.

6—858—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கை (கட்டுபெத்தை வளாகப்) பல்கலைக் கழகத்திலும் அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்திலும் நடைபெறும் தொழில் நுட்பவியலிலான தேசிய தகுதித் தேர்வுப் பத்திரத்துக்கு இட்டுச் செல்லும் மூன்று வருட பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்தல்**

இலங்கை (கட்டுபெத்தை வளாகப்) பல்கலைக் கழகத்திலும் அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்திலும் நடைபெறும் தொழில் நுட்பவியலிலான தேசிய தகுதித் தேர்வுப் பத்திரத்துக்கு இட்டுச் செல்லும் மூன்றுவருட (இரு வருடங்கள் பல்கலைக் கழகத்திலும்/நிலையத்திலும் ஒரு வருடம் கைத்தொழில் நிலையம் ஒன்றிலுமான) பகல் முழு நேர பயிற்சி நெறிக்கு 1974 ஆம் கழகவாண்டு மாணவர்களைச் சேர்த்துக் கொள்தற்பொருட்டு தகுதியுடைய பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தகவுத்திறன்—

(அ) வயது :—பரீட்சார்த்திகள் 1974 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியன்று 16 வயதுக்குக் குறைந்தவராய் இருக்கலாகாது. 20 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ஆ) கல்வித் தேவைகள் :—பின்வரும் பாடத் தொகுதியிலுள்ள இரு பாடங்களிலேனும் உட்பட குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் ஒரே தோற்றத்தில் திறமைச் சித்திகளுடன் தூயகணிதம், பௌதிகவியல், ஒரு மொழி ஆகியவை உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சா. த)ப் பத்திரப் பரீட்சையில் அதே தோற்றத்தில் சித்தி.

(1) தூயகணிதம்

(2) பிரயோக கணிதம்

(3) பௌதிகவியல்

(4) இரசாயனவியல்

(5) கேத்திர கணித, பொறிமுறைவடிவ வரைதல்

(6) உயர் கணிதம்.

3. இலங்கை (கட்டுபெத்தை வளாகப்) பல்கலைக் கழகத்துக்கு இரு பாலாரும் சேர்க்கப்படுவார்கள். ஆனால் ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்துக்கான அனுமதி ஆண்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளது.

4. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையிலேயே தயாரிக்கப்பட வேண்டும். (அச்சிடப்பட்ட படிவங்கள் வழங்கப்படமாட்டா).

5. விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்படும் முறையில் அனுப்பப்பட வேண்டும்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் :—ஒரு பாடசாலையிலிருந்து தோற்றி மேலுள்ள 2(ஆ) ஆம் உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்ற ஒரு விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை அவர் இத்தகைமைகளைப் பெற்ற பாடசாலையுள்ள பிரதேச வித்தியாதிபதிக்கு அனுப்பவேண்டும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் :—தனிப்பட்ட பரீட்சார்த்தியாகத் தோற்றி மேலுள்ள 2(ஆ) ஆம் உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்ற ஒரு தனிப்பட்ட விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை அவர் க.பொ.த. (சா.த)ப் பத்திரப் பரீட்சைக்கு முதல் தடவை தோற்றிய பிரதேசத்துக்குரிய பிரதேச வித்தியாதிபதிக்கு அனுப்ப வேண்டும்.

6. விண்ணப்பங்கள் உரிய பிரதேச வித்தியாதிபதியால் 25.7.1973 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். குறித்த திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

7. சேர்த்துக் கொள்வதற்கான மாணவர்களின் தெரிவு மாவட்ட அனுமதிப்பங்கு அடிப்படையிலும் மேலும் 2(ஆ) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தொகுதி பாடங்களில் விண்ணப்பதாரி அடைந்துள்ள தேர்ச்சி அடிப்படையிலும் நடைபெறும்.

பி. உடகம,
மகா வித்தியாதிபதி.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
11.6.1973.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

**இலங்கை (கட்டுபெத்தை வளாகப்) பல்கலைக் கழகத்திலும் அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்திலும் நடைபெறும் தொழில்நுட்பவியலிலான தேசிய தகுதித் தேர்வுப் பத்திரத்துக்கு இட்டுச் செல்லும் மூன்று வருட பயிற்சி நெறிக்கான விண்ணப்பம்**

குறிப்பு.—மேலே காணும் அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள வயதுக் கட்டுப்பாடு, கல்வித் தேவைகள் ஆகியவற்றிற்கு கண்டிப்பாக அமைபவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

1. முழுப்பெயர் :————.
(தெளிவாக எழுதவும்)

2. தபால் விலாசம் :————.

3. பிறந்த திகதி :————.
(விண்ணப்பதாரியின் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி—மூலப்படியல்ல— இணைக்கப்படல் வேண்டும்.)

4. 1.1.1974 அன்றுள்ளபடி வயது : வருடம் :————.
மாதம் :————. நாள் :————.

5. நாட்டினம் :————.

6. பால் :————.

7. (அ) அறிவித்தலின் 2(ஆ) ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பதாரி பெற்ற க.பொ.த (சா. த) பத்திரப் பரீட்சை வருடம், மாதம், சுட்டிலக்கம் : ————.வருடம் :————. மாதம் :————. சுட்டிலக்கம்.

(ஆ) சித்தி எய்திய பாடங்கள், தேர்ச்சித் தரத்துடன் (சாதாரண, திறமை. விசேட சித்தி) :

| பாடங்கள் | தேர்ச்சித் தரம் |
|---|---|
| (1) தூயகணிதம் | |
| (2) பௌதிகவியல் | |
| (3) மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) | |
| (4) | |
| (5) | |
| (6) | |
| (7) | |
| (8) | |

8. (அ) பாடசாலைப் பரீட்சார்த்தி—அறிவித்தலின் 2(ஆ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பதாரி பெற்ற மகா வித்தியாலயத்தின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பாடசாலையின் பெயரும் விலாசமும் : ————.

(ஆ) தனிப்பட்ட பரீட்சார்த்திகள்—முதல் தடவையாக க. பொ.த(சா. தா) பத்திரப் பரீட்சைக்கு விண்ணப்பதாரி தோற்றிய மகா வித்தியாலயத்தின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையின் பெயரும் விலாசமும் :————.

9. பெற்றோரின்/பாதுகாவலரின் பெயரும் விலாசமும் :————.

10. சேர்வு முன்னுரிமை:—(கட்டுபெத்தை வளாகப்) பல்கலைக் கழகத்துக்காக அல்லது ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்துக்காக அனுமதி விரும்பப்படுகிறதென்பதை முன்னுரிமைப் பிரகாரம் குறிப்பிடுக.

1.
2.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

6–731—22.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 65

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக் குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட்ட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினல்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **யூன்** | 14.6.73 | வியாழன் | 6.6.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 22.6.73 | வெள்ளி | 13.6.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 29.6.73 | வெள்ளி | 20.6.73 | புதன் | ந.ப. 12.00 |
| **யூலை** | 6.7.73 | வெள்ளி | 27.6.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 13.7.73 | வெள்ளி | 4.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 20.7.73 | வெள்ளி | 11.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.7.73 | வெள்ளி | 18.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| **ஓகத்து** | 3.8.73 | வெள்ளி | 25.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 1.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 8.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 15.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 22.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| **செத்தெம்பர்** | 7.9.73 | வெள்ளி | 29.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 5.9.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 11.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 19.9.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் வெ.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.